உ

ஸ்ரீகணாதிபாயநம:

# கணேசர்ஜாவளி,

## சரஸ்வதிஜாவளி.

இவை,

பழனிஸ்தலம்

மு. வேலாசாரியாரவர்கள்குமாரர்

வே. மௌன குரு ருத்திரமூர்த்தி

ஆசாரியாரவர்களியற்றி

சிற்சொரூபமாகவிளங்குகின்றசிதம்பரமடாதிபதிவ

கமலமூர்த்தி மௌனகுருசுவாமிகளாற்

பார்வையிடப்பட்டு

வேளம்பாக்கம்

பெ. சிங்காரவேலுமுதலியார்

பழனிஸ்தலம்

சி. சுப்பையாசாரியார்

இவர்கள் கேட்டுக்கொண்டபடி

திருப்பதி

இரத்தினமுதலியாரவர்களாற்றமது

கலைக்யானமுத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

முதற்பதிப்பு. காபி - 1000

Registered Copy Wright.

இதன் விலை அணா-2

1883௵ மார்ச்சுமீ

உ

கடவுள் துணை.

# சிறப்புப்பாயிரம்.

பழனி. நேடிவ். மிடில் இஸ்கூல்

மானேஜராகிய

## அ-இ. வெங்கடசாமிமுதலியார்

அவர்களியற்றியது.

---

## இரட்டையாசிரியவிருத்தம்.

சகலகலைவாணர்கட் கனவரதமுங் கருணை
தந்தருமுன்னின் றுகாக்குந்
தாரகசொரூபசாஸ்வதகணேசன் பரம
சரஸ்வதியம்மையிவர்மேல்

ஜெகதலத்தெண்டிசைத் தொண்டருமகிழ்ந்தினிது
செப்பும்படிக்கன்பதாய்ச்
செந்தமிழினல்மதுர ஜாவளியியற்றிநற்
சீர்த்தியெனமேற்படைத்தான்

கலைமுனிவர்கள்பணி சரவணசதானந்த
கந்தனருள்பெற்றமேலவன்
கர்த்தவ்யமானபர சமயகோளரிநாத
கடவுள்பொற்பதசேகரன்

திகழ்மவுனகுருகுருசா மூர்த்திமெய்ஞ்ஞானகுரு
சேவடிதுதிக்குமெய்
தென்பழனிவாழ்மவுன குருகுருசாமூர்த்திபுய
திடவஜ்ரதேகமுனிவே.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

உ



கணாதிபாய நம:

# கணேசர் ஜாவளி.

பருசுபாரிதானவேலனுரா

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு

க. இராகம் கமாஸ்-தாளம்-இந்துஸ்தானி-ஆதி,

பல்லவி

கணநாதா கருணாகரா - கண

சரணங்கள்

சந்ததமுமதா செந்தமிழ்ப்பாடவாரு
சிந்தைகூர்ந்தேயருள்வாய் (கணநாதா)

அங்குசபாசந்தனைச் செங்கைதனிலேந்திய
துங்கவிநாயகனே (கணநாதா)

அனவரதமுனது வனஜபதம்பரவு
மௌனக்குறைதவிர்ப்பாய் (கணநாதா

மவுனகுருகுருதா மூர்த்திதாசன் துதிக்குந்
சிவனருளக்கரனே (கணநாதா)

சாமினாநேதாமாட்லாடாதெந்துரா

என்றஜாவளியின் வர்ணமெட்டு

௨. இராகம்-கமாஸ்-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

ஆகுவாகன தேவாதிலங்கரனே

சரணங்கள்

திரிபுரையருள்பாலா தேஜோமயவிசாலா
கரிமுகவா தகிலா (ஆகுவாகன)

திடசதுர்ப்புஜாசலா திவ்யகோலாகலா
துடர்பழவினையோட்டுவாய் (ஆகுவாகன)

சகலஜெகத்காரணா சர்வப்ரிபூரணா
சுகமதுதந்தருள்வாய் (ஆகுவாகன)

மௌனகுருருத்ர மூர்த்திதாலார்ச்சித
வனஜபதகருணிபா (ஆகுவாகன)

—*—

சின்னதானரா-நே-சின்னதானரா

என்றஜாவளியின்வர்ணமெட்டு

௩. இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ரூபகம்

பல்லவி.

கணநாயகா-ஓம்-கணநாயகா.

அநுபல்லவி

மணமிகுங்கந்தகளப
வன்னசதுர்ப்புஜாசலா (ஓம்கண)

சரணங்கள்

வல்லபைதன்பாகத்தமர்த்த மங்களகுணநிதியே
தொல்லையெல்லாநீக்கியாள்வாய் நாயகருணைபதியே (ஓம்கண)

ஆதியந்தமுங்கடந்த ஆராதாரத்தின்பொருளே
சோதியுருவாய்த்துலங்குஞ் கஜமுகனேவந்தருளே (ஓம்கண)

மௌனகுருருத்ரமூர்த்தி வாழ்த்துந்த்யானகாரணனே
தினகரன்வந்தடிநாளுஞ் சின்மயபரிபூரணனே (ஓம்கண)

பொத்தாய இகசாஜார சாமிகா

என்றஜாவளியின்வர்ணமெட்டு

௫. இராகம் - செஞ்சுருட்டி. தாளம்-இந்துஸ்தானி-ஆதி

பல்லவி.

திருவளர் கணநாயகா-கெஜமுகா

அநுபல்லவி

அருமறைபுகழ்பாதா அடியேன்மேல்வரதா
பருவரல்தீர்த்தருள்வாய் கெஜமுகா
பருவரல்தீர்த்தருள்வாய் மகிழ்வுடன்
பருவரல்தீர்த்தருள்வாய் நித்தியமுக(திருவளர்)

பாசபயமோசனு பங்கஜலோசனு
நேசமாய்வந்துகாப்பாய் கெஜமுகா
நேசமாய்வந்துகாப்பாய் அடிமையை
நேசமாய்வந்துகாப்பாய் நித்தியமுக(திருவளர்)

சீதசந்த்ரசேகரா திவ்யலம்போதரா
மாதவன்றன்மருகா கெஜமுகா
மாதவன்றன்மருகா கருணைசெய்
மாதவன்றன்மருகா நித்தியமுக(திருவளர்)

செந்தமிழ்மௌனகுரு ருத்திரமூர்த்தி
பைந்தமிழ்க்கலங்காரனே கெஜமுகா
பைந்தமிழ்க்கலங்காரனே புகழ்ந்தேத்தும்
பைந்தமிழ்க்கலங்காரனே நித்தியமுக(திருவளர்

———(ஓ)———

எமிசேதுனமிலைசதா-மருலுதாளலேனுரா
என்றசாவளியின்வர்ணமெட்டு

௬. இராகம்.கமாஸ் -தாளம்-ரூபகம்.

பல்லவி.

தாரகசொரூபஞான-தந்திமுகக்ருபாகரா

அநுபல்லவி

வாரணியுஞ்சுமபாதமே- நீ
வல்லவைசிவமருவுபாகா (தார:

சரணங்கள்

விக்கின்மெல்லாந்தவிர்ப்பாய் முக்கண்ணனுரீன்றபாலா
திக்கனைத்தும்பணிந்துபோற்றுங் ஸ்ரீ-திவ்ய-மங்க-ளசு-சீலா (தாரக)

ஆத்திமாலைசூடுங்தோளா அண்டர்முனிவர்பணிதாளா
காத்தடியேன்றனைரக்ஷிப்பாய் ஸ்ரீ-கரு-ணமன்-பர்பஞ்-காளா (தாரக)

செந்தமிழ்க்கவிமவுனகுருருத் திரமூர்த்திக்கருள்தாயகா
வந்தென்குறைதன்னைமாற்றும் ஸ்ரீ-மாம-வுன-விநா-யகா (தாரக)

செவிமனக்பாலவாணிதோனுபொந்து-சானுனே
என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௬. இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி

பல்லவி.

கெஜமுகனேயுன்பாதந்தன்னையென்றும்-நம்பினேன்

அநுபல்லவி.

தன்னையென்றும்நம்பினேன்-மனச்
சஞ்சலத்தினால்வெம்பினேன் (கெஜமுக)

சரணங்கள்

ஆலமுண்டகண்டன்பாலா அடியர்க்கருள்செயுஞ்சீலா
அடியர்க்கருள்செயுஞ்சீலா வந்-தாளுவாய்க்ருபாலோலா (கெஜ)

குங்குமகந்தாதேகா குறைதவிர்ப்பாய்வைபோகா
குறைதவிர்ப்பாய்வைபோகா அங்-குசகரதலயோகா (கெஜ)

அண்டர்முனிவர்போற்றும்பாதா அடிமைமீதினில்வாதா
அடிமைமீதினில்வாதா ஏனை-யாளமனதிரங்காதா (கெஜ)

மவுனகுருருத்ரமூர்த்தி வாழ்த்துந்தமிழ்க்குகாரனே
வாழ்த்துந்தமிழ்க்குகாரனே சின்-மயசதாகெம்பீரனே (கெஜ)

கெடிகெடியகுஜாலமா-கெடிகெடி.
என்றஜாவளியின்வர்ணமெட்டு

௭. இராகம்-கமாஸ்-தாளம்-சாபு

பல்லவி.

கருணைசெய்கணநாயகா - கருணை

அநுபல்லவி

கனிவுடனென் கவிக்கிரங்கி (கருணை)

சரணங்கள்

அண்டபகிரண்டமொன் ருய்நிறைந்தோனே
அடியேன்மேல்வர்ம மாமாநுமானே (கருணை)

தண்டமிழோர்துதி சாதவிநோதா
தமியேனைக்காக்கத் தடையென்னநாதா (கருணை)

வண்டமிழால்மௌன குருருத்ரமூர்த்தி
வந்துதித்துப்போற்றும் வனஜபொற்பாதா (கருணை)

---

இந்துமுகிவாளிகி மன-ஸிந்தலதாயா ஸமந்துவே
என்றஜாவளியின்வர்ணமெட்டு

அ- இராகம்-இந்துஸ்தானிபியாக்-தாளம்-ரூபகம்

பல்லவி.

ஐங்கராவுன்திருமலரடி
பண்டினேனையா-எனை-யாளுவாய்மெய்யா

அநுபல்லவி

மங்கைவல்லபைபங்கனேனவே வளருமைபோகா கமழ்
துங்களபகுங்குமம்புனை சுந்தரவாகா ஜெக
ஜோதிநேர்தேகா - ஜெக ஜோதிநேர்தேகா (ஐங்கரா)

வஞ்சகப்பிரபஞ்சமீதினில் வருந்துயரோட்டு வினைத்
தஞ்சமென்றேயஞ்சலிசெயுந் தாசனைமீட்டு நின்
சரணிணைகாட்டு-நின் சரணிணைகாட்டு (ஐங்கரா)

கல்விவல்லவர்தொல்லைநீக்கிநற் கதிதரும்நாதா மறை
வல்லபிரமனெல்லவன்துதி மாதவபோதா சதா
மவுனவிநோதா-சதா மவுனவிநோதா (ஐங்கரா)

மௌனகுருருத்திரமூர்த்திதுதி வாமனகுமாரா திரு
வனிதையடாமப்புனிகன்னகர் வாழ்கெஜமுகா நல்
வரந்தருமஹரா-நல் வரந்தருமஹரா (ஐங்கரா)

அந்தலோனே-தெல்லவாரே-லலன-எமிசேதுனே
என்றஜாவளியின்வர்ணமெட்டு

௯. இராகம்-இந்துஸ்தானிபியாக்-தாளம்-ரூபகம்

பல்லவி.

வர்மமின்னஞ்செய்வதேது
வந்தருள்கணநாதனே

அநுபல்லவி.

தர்மமேவியஸாதுசர்ஜன
சங்கம்பணியும்பாதனே (வர்மமின்)

சரணங்கள்

கானகந்தனில் - ஞானகுமரன்
கருதிட முன்வந்துதித்தவா
தானவர்களின் - சேனைவெளியிற்
தான்வராமற்றடுத்தவா (வர்மமின்)

குஞ்சரமுக - ரஞ்சிதசுர
கோமளவஜ்ரகாயனே
கஞ்சமாமலர்ச்செஞ்சரணிணை
காட்டுமிக்கிதநாயனே (வர்மமின்)

மவுனகுரு - ருத்ரமூர்த்தி
வாழ்த்துஞ்சந்த்ரஜடாதரா
கயிலைநாதன் - னின்றுகாக்கும்
கர்த்தஞானலம்போதரா (வர்மமின்)

சாமிநின்னடிவேமிரா - சாமி
என்றசாவளியின்வர்ணமெட்டு

௰ இராகம்-இந்துஸ்தானிபியாக்தாளம்ரூபகம்.

பல்லவி

ஆதுவாகணதேவா - ஆது

சரணங்கள்

இந்தவேளைவந்தமைந்தன்
பந்தபாசமெல்லாந்தீர்ப்பாய்
செந்தமிழ்வளர்கொண்டாடிடு
கந்தராதிசமத்ர (ஆதுவாகண)

விகற்பமய - செகத்துமயக்கந்
தகர்த்தெனைவந்தாட்கொள்ளுவாய
இகத்தும்பரத்து-மெசன்றுய்வின்ற
மகத்துவரூபா (ஆகுவாகன)

மவுனகுரு-ருத்ரமூர்த்தி
கவிலுங்கவித்தொடைமார்பா
சிவசவுந்தரியீன்றஞான
தேசிகநாதா (ஆகுவாகன)

கணேசர் ஜாவளி - முற்றிற்று.

உ



ஷெவிகிரு வொ-ஈவல-ஜெமெமெய-ம்-கஃ

# சரஸ்வதி ஜாவளி.

சாமிகாநதோமாட்லாடதெந்துரா

என்றஜாவளியின்வர்ணமெட்டு

க. இராகம்-கமாஸ்-தாளம் - இந்துஸ்தானி - ஆதி

பல்லவி.

ஞானகாயத்ரி மாதே உனை நம்பினேன்

சரணங்கள்

வேதபுஸ்தகபாணி
மாதவமிகுங்கல்யாணி
பங்கஜமனைநிலக்கி
ஸஞ்சலந்தீர்த்தருள்வாய்

வித்யாவினோதவாணி
(ஞானகாயத்ரி)
துங்கதமிழ்துலக்கி
(ஞானகாயத்ரி)

மௌனகுருருத்ர மூர்த்திமனதில்வாழுங்
கலாசரஸ்வதிதேவியே (ஞானகாயத்ரீ)

போபோமனே-பொம்மனே-பரமரோஸானி
என்றசாவளியின்வர்ணமெட்டு

௬., இராகம்-கமாஸ்-தாளம் - இந்துஸ்தானி - ஆதி

பல்லவி

தாதாகல்வியன்னமே - நின்றெரிசனந்

அநுபல்லவி.

மாதவர்பணிந்திடும்
மாதேசெந்தமிழ்வாணி (தாதாகல்வி)

சரணங்கள்

சந்ததமுனதிரு தாளிணைநம்பினேன்
சிந்தைமிகமகிழ்வாய்ச் செந்தமிழ்பாடவரந் (தாதாகல்)

வேதன்றனைமணந்த வெண்டாமரையாளே
மாதலமீதினிதம் வண்டமிழ்பாடவரந் (தாதாகல்)

மௌனகுருருத்ர மூர்த்திதாசார்ச்சித
பஜவலாட்டியேயென்றும் பைந்தமிழ்பாடவரந் (தாதாகல்)

மானபிமானமு-ஆதனிதே-தனிதே-தனிதே
என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௭., இராகம் - கமாஸ் - தாளம் - சாபு.

பல்லவி

மாவன மேறிய

அநுபல்லவி.

பாமகளே-வருளே - தெருளே (மாவன)

சரணங்கள்

பங்கமனைத்தவிலக்கிப் பட்சம்வைத்தென்றும்
என்கலிதீர்மாணியே வாணியே-வாணியே (மாவ)

சந்ததமுமதுர தமிழ்பாடவரமருள்
செந்தமிழ்ரஸ-வாணியே வாணியே-வாணியே (மாவ)

மௌனகுருருத்ர மூர்த்திதாசன்றனில்
வளருஞ்சுப-வாணியே வாணியே-வாணியே (மாவ)

---

கெடிகெடியெருஜாலமா கெடிகெடி

என்றசாவளியின்வர்ணமெட்டு

௩. இராகம் - கமாஸ் - தாளம் - சாபு.

பல்லவி.

வரமருள்பாரதியே - வா

அநுபல்லவி

வாணிநீயென் - வாக்ககலா (வரமருள்)

சரணங்கள்

மகிதலமெலாம்போற்று மாதவயின்னே
மதலைமேல்வர்ம மாபசும்பொன்னே (வரமரு)

சுகமுடனென்றுவிற் றுணையாகவாழுந்
தூயகாயத்ரித் தோகையேநீளும் (வரமரு)

வனஜமலரயனை மணர்ந்தசெந்தேனே
கைமக்கஜுவன்பாதம் வழுத்துகின்றேனே (வரமரு)

மௌனகுருருத்ர மூர்த்திமீதன்பு
இணமுங்களியும் ஜெயதமிழ்மானே (வரமரு)

மருபாரிதாளலேனுரா - மரு
என்றஜாவளியின்வர்ணமெட்டு

௫. இராகம்-கமாஸ்-தாளம்-இந்துஸ்தானி - ஆதி,

பல்லவி.

கலைமாதேதயாபரியே - கலை

சரணங்கள்

சந்த்ரமதராப்ர பந்தம்புகலவரந்.
தந்தருள்பாரதியே (கலைமாதே)

வெண்டாமரையினுளே வெண்மேனியுடையாளே
தண்டமிழ்ப்பாரதியே (கலைமாதே)

அன்னவாகனத்தாளே அம்புஜகுணத்தாளே
என்னையாள்பாரதியே (கலைமாதே)

மௌனகுருருத்ர மூர்த்திகாசன்மனதிற்
திணமொளிர்பாரதியே (கலைமாதே)

(ஸ்ரீ)

ஏமிசேதுனகிலைசதா மருலுதாளலேனுரா
என்றஜாவளியின்வர்ணமெட்டு

௬- இராகம் - கமாஸ் - தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஞாலந்தனிலும்பதத்தை நம்பினேன் - கலைவாணியே

அநுபல்லவி

சிலையன்றனைமணர்ந்த ஸ்ரீ
தேவிதிவ்யசாமாம்பாகி (ஞாலந்தனி)

சரணங்கள்

உன்னையல்லாலெனக்கொருதுணை பண்டோவிந்தப்புவிமீது
அன்னையுமனேக்கிரீ யாள-லெவரென்னை-தாயிப்-போது (ஞா

பங்கஜபுஷ்பலோசனி பக்தபாசமோசனி
என்கலிதனைத்தவிர்ப்பாய்-நீ இங்கிதப்-பிரகா-சனி (ஞா)

மவுனகுருருத்ரமூர்த்தி வாழ்த்தியதயாநிதியே
கவிவலர்க்கருள்செய்துகாக்கும்-நீ காசி-ராச-பூபதியே (ஞா)

(*)

கந்தனைக்காத்தாரே பேட்டிநலாதே

என்றஜாவளியின் வர்ணமெட்டு

ஏ. இராகம் - கமாஸ்-தாளம்-சாபு

பல்லவி.

செந்தமிழ்க்கலைமாதே-வுனைநம்பினேன்

சரணங்கள்

சந்ததமுமெனது சிந்தைதனிலிலங்கு
செந்திருவேஞான தேவி (செந்தமிழ்)

வேண்டுமெனியேனை யாண்டுகொள்வதென்றோ
தாண்டியன்னமீதேறுந் தாயே (செந்தமிழ்)

மௌனகுருருத்ர மூர்த்திநதிக்குங்கல்வி
வனிதையேகருணைசெய் வாயே (செந்தமிழ்)

பொத்தாயா- இகசாலுரா - சாமிகா

என்றஜாவளியின்வர்ணமெட்டு

ஐ. இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

எந்தனுக்கருள்புரிவாய்-அபிராமி.

## சரஸ்வதி ஞானவளி.

அநுபல்லவி

| | | |
|---|---|---|
| செந்தமிழ்க்கலைமாதே | சிந்தைகூர்ந்திப்போதே | |
| பைந்தமிழ்பாடவரம் | அபிராமி | |
| பைந்தமிழ்பாடவரம் | அடிக்கடி | |
| பைந்தமிழ்பாடவரக் | கனிவுடன் | (எந்தனக்) |
| கவிராஜர்மனந்துற்ற | கன்னியேசீர்பெற்ற | |
| கவிவாணியுன்னைநம்பினேன் | அபிராமி | |
| கவிவாணியுன்னைநம்பினேன் | சதமெனக் | |
| கவிவாணியுன்னைநம்பினேன் | கனிவுடன் | (எந்தனக) |
| அரியாசனத்தின்மீது | அதிருசையெப்போதும் | |
| சரியாகவைத்ததாயே | அபிராமி | |
| சரியாகவைத்ததாயே | கல்விதந்து | |
| சரியாகவைத்ததாயே | கனிவுடன் | (எந்தனக்) |
| நித்தம்மவுனகுரு | ருத்ரமூர்த்திதாசன் | |
| சித்தந்தனிலிலங்கும் | அபிராமி | |
| சித்தந்தனிலிலங்கும் | காட்சிதாச் | |
| சித்தந்தனிலிலங்கும் | ஞானமூர்த்தி | (எந்தனக்) |

சாமிவேளைகாதரா-சாமி

என்றஜானவளியின்வர்ணமெட்டு

௬. இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஞானமாதேகாரம்மா - ஞான

சரணங்கள்

| | | |
|---|---|---|
| ஞாலந்தனி | னம்பினேனுன்னைச் | |
| சீலமாகத் | தேவியேயென்னை | (ஞானமா) |
| வேதன்றனில் | வீற்றிருந்தாளே | |
| நிதகற்றுந் | தேவியிந்நாளே | (ஞானமா) |
| மவுனகுரு | ருத்திரமூர்த்தி | |
| கவிதனக்குக் | கருணைசெய்யும் | (ஞானமா) |

இக்காளவலகாதே-வாணிநுவை மெஞ்சதிலே
என்றஜாவளியின்வர்ணமெட்டு

௬. இராகம்-பாஜு-தாளம்-இந்துஸ்தானி-ஆதி

பல்லவி.

எந்தனைக்காப்பாயே-நின்னிசைப்பொற்பாதம்
இன்பமுடன் இங்கிதமாய் நம்பிறவர்ணனி

11667

சரணங்கள்.

மாமலர்மேனியே — மதுரகல்யாணியே
நாமமாலையின்னே — சமயம்பொன்னேனே
சாதுகயா - நிதியமாடுமோர் - நிதிசெயசகா
சர்வலோகநாயகியே (எந்தனை)

துங்ககவிப்பிர — சங்கீதலக்ஷ்மி
மங்களமாகவென் — கவிலக்ஷ்மி
வாழ்விக்குந்தேவனே-வளர்கலைமானே-நம்பினேனே
வரமுதவுசரஸ்வதி (எந்தனை)

மௌனகுருநாத — மூர்த்திதாசன்றன்
மனதினில்லுறும் — மாமணியே
மைந்தன்மீது - வஞ்சமேது - மகிழ்ந்திப்போது
மாதேயன்னவாஹினியே (எந்தனை)

சரஸ்வதிஜாவளி - முற்றிற்று.

சரஸ்வதி ஜாவளி

முற்றிற்று.

உ

ஸ்ரீகணேசாயநம:

# புத்தகவிளம்பரம்.

இதனாலன்பர்கள்யாவருக்குந் தெரிவிப்பதியாதெனில்-பழனிஸ்தலத்தில்வசிக்கும்-வே மௌன குரு ருத்திரமூர்த்தி ஆசாரியாரவர்களாலியற்றிய-குணோசார்ஞானாவளி-சாக்ஷிஞானாவளி-இவ்விரண்டுமடங்கிய இப்புத்தகத்தை-கனம்பொருந்திய கெவர்ன்மெண்டாரால்-1867 ௵ த்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவில் 6-வது விதியின்படி-ரிஜிஸ்டர்செய்து(ஆல்ரயிட்ரிஜர்வெட்) ஆகியிருக்கிறபடியால்-இதையெந்தச்சுக்கூடத்தலைவர்களும்-மற்றவர்களும் - இந்நூலாசிரியர் அநுமதியைப்பெற்றுக்கொள்ளாமல் - எவ்விதத்திலும் எவ்விதபாஷையிலும் மொழி பெயர்த்தச்சிடக்கூடாது-மீறி அச்சிடுவோர்களாகில்கோர்ட்டார்மூலமாய்மேல்நடத்தப்படும்.

☞ இப்புத்தகமும்-இன்னம் பலவிதமான-தெலுங்கு தமிழ்கிரந்த புத்தகங்களும்-அகஸ்தியர்முதலிய பெரியோர்கள் திருவாய்மலர்ந்தருளிய-வைத்தியசாஸ்திரங்களும் சென்னபட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை-முத்துமாரியம்மன்கோவில்த்தெருவில்(6) வது - நெம்பர் வீட்டில்-தி - இரத்தினமுதலியாரவர்களிடத்திலும் மேற்படி பெத்துநாய்க்கன்பேட்டைநம்பலையன்தெருவில்(31) வது நெம்பர்வீட்டில்-கோளம்பாக்கம்-பெ - சிங்காரவேலு முதலியாரிடத்திலும் பழனியில்-வே-கிருஷ்ணமூர்த்தி ஆசாரியாரிடத்திலும்விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

1883 ௵ மார்ச்சு மீ 15 உ

இப்படிக்கு
☞ சி-சுப்பையாசாரி.
பழனி